People’s Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு
# 01.05.2009 முதல் 09.05.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | **01.05.09** | **மதுரை மாவட்டம்:** ஊமச்சிக்குளம் அருகே கிச்சுலுபைச் சேர்ந்த வேலுச்சாமி மகள் சத்யா. வேலுச்சாமி அப்பகுதியில் வீடு ஒன்று கட்டி வருகிறார். கட்டிடப் பணி நடைபெறுவதால் சத்யா கட்டுமான பணிகளின் சுவரின் மீது தண்ணீர் ஊற்றுவது வழக்கம். இவ்வாறு ஊற்றிய போது பக்கத்து வீட்டு சுவரில் தண்ணீர் பட்டது. இதனால் ஆத்திரம் அடைந்த கண்ணன் சத்யாவை அடித்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 2. | **01.05.09** | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பாச்சேத்தியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியன் மனைவி இருளாயி. இருவருக்கும் இடையே கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்துள்ளனர். இந்நிலையில் இருளாயியை மீண்டும் பாலசுப்பிரமணி சேர்ந்து வாழ அழைத்துள்ளார். இருளாயி வர மறுத்ததால் கோபம் அடைந்த பாலசுப்பிரமணி இருளாயியை அரிவாளால் வெட்டி கொலை செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 3. | **01.05.09** | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் பசுமலை அடுத்த ஜோசன்புரத்தை சேர்ந்த வேல்முருகன் மனைவி கார்த்திகாயினி இருவருக்கும் திருமணம் நடந்த 10 மாதங்கள் ஆகிய நிலையில் கார்த்திகாயினி நேற்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 4. | **01.05.09** | **கன்னியாகுமரி மாவட்டம்:** விளவங்கோடு தாலுகா, திருத்துவபுரம் ரேஜின் என்ற மாணவனை கிளமன் என்ற ஆசிரியர் அடித்து சித்திரவதை. | வகுப்பறை வன்முறை | கணேசன், RMA |
| 5. | **01.05.09** | **திருச்சி மாவட்டம்:** தனரத்தினம் நகரைச் சேர்ந்த ஜவஹர்நிஷா கணவர் மார்ச் ஒன்றாம் தேதி வீட்டை விட்டு வெளியே சென்றவர் வீடு திரும்பவில்லை. இது பற்றி போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லாததால் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 6. | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** கூங்கையூர் கண்ணதாசன் நகர் 3வது தெரு வாசு 2வது பிளாக்கை சேர்ந்த உமாபதியை சென்னை காவல் துறையினர் பொய் வழக்கு போட்டு சித்ரவதை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகரன், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | 01.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அனாதையாக கிடந்த லாரியில் 120 மூடை ரேஷன் அரிசி கண்டுப்பிடிக்கப்பட்டது. | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்ஓசை |
| 8. | 01.05.09 | **திருவள்ளூர் மாவட்டம்:** ஆற்றுப்படுகைகள் மற்றும் ஏரி புறம்போக்கு நிலங்களை பட்டா நிலங்களில் மணல் கடத்துவதாக கிடைத்த தகவலின் பேரில் நடத்தப்பட்ட சோதனையில் பல்வேறு பகுதிகளிலிருந்து 12 சரக்கு லாரிகளை போலீசார் பறிமுதல் செய்தனர். | மணல் கொள்ளை | தமிழ்ஓசை |
| 9. | 01.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** திருவில்லிப்புத்தூர் அடுத்த சுந்தரபாண்டிபுரத்தை சேர்ந்த விஜயகுமார் மனைவி சந்திராவை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியதாக போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 10. | 01.05.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** செங்கோட்டை தாலுகா வல்லம் கிராமம்.கோவில் திருவிழாவின் போது சுதந்திர போராட்ட வீரன் சுந்தரலிங்கம் விளம்பர பலகைகை அரிவாளால் வெட்டி கிழித்த உதவி ஆய்வாளரை கண்டித்து போராட்டம் நடத்திய ஊர் தலித் பொது மக்கள் 250 பேர் மீது வழக்கு. | தலித்துகள் மீதான வன்முறை | கணேசன், RMA |
| 11. | 01.05.09 | **மதுரை மாவட்டம்:** உத்தப்பநாயக்கனூர் பகுதியைச் சேர்ந்த தங்கராஜ் மகள் வசந்தி. தங்கராஜ் தோட்டத்தில் வேலை பார்த்து கொண்டிருந்த பொழுது வசந்தி சமையல் செய்தார். சாப்பாடு தாமதமாக கொண்டு சென்றதால் தந்தை திட்டியுள்ளார். இதனால் மனமுடைந்த வசந்தி தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 12. | 01.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி அரபு தெருவைச் சேர்ந்த பஜருல்லாகன் மனைவி சர்மிளாபானுவை அவரது மாமியார் குடும்பத்தினர் தூண்டுதலின் பேரில் கணவர் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த், RMA |
| 13. | 01.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி வைத்தியலிங்கபுரம் பெரியார் நகரைச் சேர்ந்தவர் பாண்டி மகள் தேன்மொழி. +2 படித்து வந்த தேன்மொழி கடந்த 23ம் தேதி கடைசி தேர்வு எழுத சென்றவர் வீடு திரும்பவில்லை. பாண்டி பல இடங்களிலும் தேடி கிடைக்காததால் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த், RMA |
| 14. | 01.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** வாணியக்குடியை சேர்ந்த அசோக்குமார் மனைவி தனலட்சுமி. அசோக்குமா,ர் தனலெட்சுமி இருவரும் காதலித்துள்ளனர். இந்நிலையில் தனலெட்சுமி | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கர்ப்பமுற்றப் பின் திருமணம் செய்ய மறுப்பு, மேலும் அசோக்குமார் வெளிநாடு சென்று விட்டார். இந்நிலையில் வெளிநாட்டில் இருந்து திரும்பிவில்லை. போலீசார் சமாதானத்திற்கு பின் திருமணம் செய்து வைத்தனர். இந்நிலையில் அசோக்குமார் தனலெட்சுமியை அழைத்து சென்று கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 15. | 01.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி, கோவிலாங்குளம் அருகே வாழவந்தாள்புரத்தை சேர்ந்த சரவணன் மனைவி கலாவதி (30). கலாவதிக்கும், அப்பகுதியைச் சேர்ந்த குமார், பெருமாள், ராஜேந்திரனுக்கும் தண்ணீர் பிடிப்பதில் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் வீட்டில் தனியாக இருந்த கலாவதியை பெருமாள், குமார் ராஜேந்திரன் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த், RMA |
| 16. | 01.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு பக்கமுள்ள சித்திரைப்பட்டியை சேர்ந்தவர் அம்மாசி மனைவி காஞ்சனா 8 மாதம் முன்பு திருமணமான காஞ்சனா மர்மமான முறையில் இறந்து கிடந்தார். காஞ்சனா சாவில் மர்மம் இருப்பதாக தந்தை கோவிந்தசாமி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில், RMA |
| 17. | 01.05.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** பெத்தனப்பள்ளி கிராமத்தை சேர்ந்த பைரசன் மனைவி அம்பிகா வீட்டில் தனியாக இருந்த பொழுது அப்பகுதியைச் சேர்ந்த முருகன், நாகராஜ், பாக்கியராஜ், அம்பிகாவிடம் தகாதவாறு நடந்துள்ளனர். இது பற்றி அம்பிகா போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில், RMA |
| 18. | 01.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** அரூரை சேர்ந்த கெலாபாறையை சேர்ந்த வேடியப்பன் மனைவி சுசிலாவுக்கு வயிற்று வலியால் அடிக்கடி அவதிப்பட்டு வந்தார். இந்நிலையில் வீட்டில் யாரும் இல்லாத நிலையில் அரளி விதை குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி சுசிலா கணவர் மற்றும் தந்தை போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தல், RMA |
| 19. | 01.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** கடத்தூர் அடுத்த ஒடசல்பட்டிபுதூரைச் சேர்ந்த கிருஷ்ணன் மகள் ஜெயப்பிரியா அப்பகுதியில் உள்ள அரசு துவக்கப்பள்ளியில் மூன்றாம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில் அப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயப்பிரியாவை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை. | செந்தில், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| **20.** | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** தாரிகா (18), சித்ரா (18), பிரியா (22) விக்னேஸ்வரி (25), பவித்ரா (18) சென்னையில் இளம் பெண்களை கடத்தி சிறை வைத்து விபச்சாரத்திற்கு விற்பனை செய்யும் பெண்களை போலீசார் மீட்டனர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **21.** | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** தாம்பரம் திருசூலத்தை சேர்ந்தவர் லதா (29). லதா வீட்டில் தனியாக இருந்த பொழுது அப்பகுதியைச் சேர்ந்த லாரி கிளீனர் செல்லதுரை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளார். இது பற்றி லதா போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **22.** | **01.05.09** | **நாமக்கல் மாவட்டம்:** கொண்டப்பநாயக்கன் பட்டியைச் சேர்ந்த செங்கோடன் மகள் +2 படித்து விட்டு வீட்டில் தனியாக இருந்த போது அப்பகுதியைச் சேர்ந்த செந்தில் கடத்தி சென்று விட்டதாக போலிசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **23.** | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** மணலி புதுநகருக்கு அடுத்த பழைய நாப்பலை கிராமத்தில் உள்ள அரசுப்பள்ளியில் கழிப்பிட வசதியில்லை. அரசிடம் இருந்து பெறப்பட்ட நிதியில் கட்டப்பட்ட கட்டிடத்தை திறக்காமல் உள்ளதால் மாணவர்கள் அவதி | வகுப்பறை வன்முறை | பிரபாகர், RMA |
| **24.** | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூரைச் சேர்ந்த ராஜா மகள் ரமணி (17). ரமணியை அப்பகுதியைச் சேர்ந்த உறவினரான சந்தோஷ்குமார் காதலித்து கர்ப்பமாக்கி தனி அறையில் அடைத்து வைத்துள்ளனர். இது பற்றி ராஜா போலீசில் புகார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **25.** | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** திருவொற்றியூர் கிராமத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு (25) மனைவி (21). சங்கீதாவை அவரது கணவர் குடும்பத்தார் வரதட்சணைக் கேட்டு சித்திரவதை செய்துள்ளனர். இது பற்றி சங்கீதா போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **26.** | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** செய்யூர் அருகேயுள்ள கத்திவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த செல்வியின் கணவர் கான்ஸ்டபில் முருகன் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியதுடன் 2வது திருமணம் செய்து கொள்வதாக மிரட்டல் விட்டுள்ளார். இது பற்றி பலமுறை போலீசார் சமரசம் செய்து வைத்தும் முருகன் திருந்ததால் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **27.** | **01.05.09** | **சென்னை மாவட்டம்:** நடுநிலைப்பள்ளி எம். எம். டி.ஏ.2 பள்ளியில் செயல்படும் அங்கன்வாடி பள்ளி எண் 227 மாணவன் லெனின் (3). 3 | வகுப்பறை வன்முறை | பிரபாகர், RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வயது லெனின் அரசு அங்கன்வாடியில் படித்து வருகிறான். சம்பவத்தன்று பள்ளி வளாகத்தில் உள்ள தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து இறந்து விட்டான். இது குறித்து அரசு அதிகாரிகள் விசாரணை. | | |
| **28.** | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** புளியந்தோப்பு அம்மையப்பன் தெருவை சேர்ந்த குமார் மனைவி விஜயலட்சுமி அப்பகுதியில் உள்ள பலரிடம் கடன் வாங்கியுள்ளார். இதனால் கணவன் மனைவிக்கிடையே குடும்பத்தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் கோபம் அடைந்த குமார் பீர் பாட்டில்கள கொண்டு கை, கால்களில் கிழித்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **29.** | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** ஆவடி அடுத்த திருநின்றவூர் முருகேசன்நகர் 6வது குறுக்குத் தெருவில் வசிக்கும் நூர்தீன் மனைவி சாகீன். சாகீன் வீட்டில் தனியாக இருந்த பொழுது அப்பகுதியைச் சேர்ந்த பாவா பாலியல் தொந்தரவு செய்துள்ளார் இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **30.** | 01.05.09 | **சேலம் மாவட்டம்:** மேட்டூர் அருகே உள்ள புதுச்சாம்பள்ளியைச் சேர்ந்த முருகேசன் மகன் மணிகண்டன். 10ம் வகுப்பு படித்து வந்த மணிகண்டன் மருத்துவமனைக்கு செல்வதாக கூறி சென்றவர் வீடு திரும்பவில்லை. இந்நிலையில் மணிகண்டல் உடல் ரயில் தண்டவாளத்தில் கிடந்தது. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | மாணவர்களுக் கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **31.** | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** தாம்பரம் பகுதியில் பிறந்து ஓரிரு நாட்களே ஆன ஆண் குழந்தை மீட்கப்பட்டது. போலீசார் விசாரணை. | ஆண் சிசு | பிரபாகர், RMA |
| **32.** | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** தாம்பரம் நேஷனல் தியேட்டர் அருகே சாலை ஓரத்தில் தொப்புள் கொடி கூட அகற்றப்படாத நிலையில் சிசு மீட்பு | | பிரபாகர், RMA |
| **33.** | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** கொடுங்கையூர் தன்னார்வ தொண்டு நிறுவன, ஆதரவற்ற இல்லத்தைச் சேர்ந்த பெண்கள். ஆதரவற்றோர் இல்லத்தைச் சேர்ந்த 14 வயதுடைய 18 வயதுடைய பெண்கள் வேலை தேடி வெளியே சென்ற போது கொடுங்கையூர் சேர்ந்த 5 இளைஞர்கள் பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| **34.** | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** தாம்பரம் இராஜாஜி சாலை அருகே இருந்த குப்பைதொட்டியில் பிறந்து சில மணி நேரமே ஆன ஆண் குழந்தையை போலீசார் மீட்டனர். | ஆண் சிசு மீட்பு | பிரபாகர், RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 35. | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** பரங்கிமலையில் உள்ள கர்.சி.எம். பள்ளி கூடம் சத்துணவு மையத்திற்கு வந்து அரிசி மூட்டைகளை கடத்த இருந்தவர்களை பொது மக்கள் போலீசாரிடம் ஒப்படைத்தனர். | ரேஷன் அரிசி கடத்தல் | பிரபாகர், RMA |
| 36. | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** குணசேகரன் அவரது மனைவியை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளார். இந்நிலையில் குணசேகரன் சிங்கப்பூர் சென்று தலை மறைவாகி இருந்தார். 2 வருடத்திற்கு பின் சென்னை வந்த போது பிடிபட்டார்டி. இது பற்றி போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 37. | 01.05.09 | **சென்னை மாவட்டம்:** தண்டையார் பேட்டையை சேர்ந்த தேவி. 16 வயதுடைய தேவியை அப்பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய சரவணன் காதலித்து உடலுறவு கொண்டு திருமணம் செய்து மறுப்பு. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 38. | 02.05.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே உள்ள வானக்குளத்தை சேர்ந்த அழகுமலை மனைவி மயிலாவுடன் அங்குள்ள தோட்டத்தில் வேலை பார்த்து வந்துள்ளார். அப்பொழுது தோட்ட உரிமையாளர் ராஜேந்திரனுடன் மயிலாவுக்கு தொடர்பு ஏற்பட்டு.இதை அழகுமலை தட்டி கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ராஜேந்திரன் அழகுமலையை சாதி பெயர் சொல்லி திட்டி கத்தியால் குத்தியுள்ளார். இது பற்றி போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லாததால் கோர்டில் மனு தாக்கல் செய்தார். | தலித்துகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 39. | 02.05.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** வத்தலக்குண்டு விவேகானந்தல் நகரில் வசிப்பவர் ராஜகோபால் மனைவி புஷ்பகலா. தனது மனைவி செந்தமிழ் செல்வியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வாழ்ந்தவர் சென்னையைச் சேர்ந்த புஷ்பகலாவுடன் நட்பு ஏற்பட்டு, காதலாக மாறி இருவரும் தனியே திருமணம் செய்யாமல் வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் ராஜகோபால் தம்பி வீட்டிலிருந்து புஷ்பகலாவுடன் மைசூருக்கு சென்றிருந்தார். மைசூர் சென்ற புஷ்பகலா முன்னரே வீடு திரும்பிவிட்டார். இதனால் ஆத்திரம்அடைந்த ராஜேந்திரன் புஷ்பகலாவை நிர்வாணப்படுத்தி சித்ரவதை செய்துள்ளார். இதில் புஷ்பகலா உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 40. | 02.05.09 | **தேனி மாவட்டம்:** பெரியகுளம் தாலுகா அகமலை ஊராட்சி 3வது வார்டு குறவன்குடியைச் சேர்ந்த சங்கிலி மகள் ராஜேஸ்வரியை அவரது அத்தை, கணவர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்துள்ளார். ஆனால் ராஜேஸ்வரி மறுக்கவே அரிவாளால் வெட்டியுள்ளார். இதில் ராஜேஸ்வரி உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 41. | 02.05.09 | **விருதநகர் மாவட்டம்:** சிவகாசி திருத்தங்கல் அருகே உள்ள சூலாவூரணியை சேர்ந்த பாண்டி மனைவி முருகேஸ்வரி. பாண்டி தினமும் குடித்து விட்டு வந்து முருகேஸ்வரியை அடித்து சித்ரவதை செய்துள்ளார். இது பற்றி முருகேஸ்வரி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 42. | 02.05.09 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி தாலுகா, | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த், RMA |
| 43. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** கரிமேடு அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த அறிவழகன் மனைவி ஈஸ்வரி. அறிவழகன் அவருடன் வேலை பார்க்கும் லீலா என்ற பெண்ணை 2வது திருமணம் செய்து கொண்டார். இது பற்றி ஈஸ்வரி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 44. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** பெரம்பூர் நீலம் தோட்டத்தை சேர்ந்த ஆனந்தன் மனைவி கல்யாணி. ஆனந்தன் வேலைக்கு செல்லாமல் வீட்டுக்கு பணம் தராமல் இருந்துள்ளார். இதனால் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட பிரச்சனையில் மனமுடைந்த கல்யாணி மண்ணெணைய் ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 45. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** எர்ணாவூரைச் சேர்ந்தவர் சையத் இஸ்மாயில் மகள் பாத்திமா அப்பகுதியைச் சேர்ந்த ராஜவேலுவை காதலித்து பதிவு திருமணம் செய்துள்ளார். இச்சம்பவம் பற்றி பெற்றோருக்கு தெரியவே பாத்திமாவை ராஜவேலு வீட்டுக்கு அனுப்பி வைத்தார். ராஜவேலு பாத்திமாவை 10 லட்சம் கேட்டு சித்ரவதை செய்ததோடு பாத்திமாவை விட்டு வெளிநாட்டுக்கு தப்பி ஓடிவிட்டார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 46. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** பெரம்பூர் புளியந்தோப்பு ஜாபர்கான் பேட்டையைச் சேர்ந்த அப்துல்ரசாக் மனைவி அபிதாபேகம். 7 மாத கர்ப்பினியான அபிதாபேகத்தை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி அபிதாபேகம் | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 47. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** வேளச்சேரி மேடவாக்கம் வடக்குப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கதிரேசனுக்கு சொந்தமான வயலின் கிணற்றில் பெண் சிசு சடலம் கிடந்துள்ளது. இது பற்றி கதிரேசன் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண் சிசு | பிரபாகர், RMA |
| 48. | 02.05.09 | **திருச்சி மாவட்டம்:** புத்தூர் பார்வை இழந்தோர் அரசு பள்ளி மாணவி ராஜலட்சுமி மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 49. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** புதுவண்ணாரபேட்டை அம்மணிஅம்மாள் தோட்டத்தை சேர்ந்த சுரேந்திரன் மனைவி ஜெயந்தி மகள் சந்தியா. 9 வயதுடைய சந்தியா வீட்டில் தனியாக இருந்த பொழுது அவரது வீட்டு உரிமையாளர் வேலு வந்துள்ளார். தனியாக இருந்த சந்தியாவிடம் பாலியல் தொந்தரவு செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 50. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** குரோம்பேட்டை காந்திநகர் வள்ளுவர் தெருவைச் சேர்ந்த ரவி மகள் சரண்யா +2 தேர்வுகள் சரியாக எழுதாததால் மனமுடைந்தவர் மண்ணெணைய் ஊற்றி தீ வைத்து தற்கொலை. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 51. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** கோயம்பேட்டில் ஜே.ஏ. இன்ஸ்டிடியூஸ் ஆப் இன்ஜினியரிங்க அன்ட் டெக்னாலஜி கல்லூரி விடுதி மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தராத தனியார் கல்லூரி நிர்வாகத்தை கண்டித்து மாணவ, மாணவிகள் வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் நடத்தினர். | வகுப்பறை வன்முறை | பிரபாகர், RMA |
| 52. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** பிரியா கரூரைச் சேர்ந்த சக்திவேல் அமெரிக்காவில் சிப்பாயாக வேலை பார்த்து வந்தவர். பெற்றோர்களை பார்க்க கரூர் வந்துள்ளார். இந்நிலையில் சென்னைக்கு வந்தவர் நடுரோட்டில் சென்ற பிரியாவை கட்டிப்பிடித்துள்ளார். இது பற்றி பிரியா போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 53. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** சாலிகிராமம் முனுசாமி தெருவைச் சேர்ந்த ராமாவின் தோழி மகள் அஸ்வினியை அப்பகுதியைச் சேர்ந்த செந்தில்குமார் காதலித்துள்ளார். இதை தட்டிக் கேட்ட ராமாவை செந்தில் கழுத்தை அறுத்து கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழகுகு பதிவு செய்து | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணை. | | |
| 54. | 02.05.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை நெசவாளர் காலனியைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகள் கனகவள்ளி அப்பகுதியில் உள்ள வில்பத்திரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தவரை அவரது தலைமை ஆசிரியர் ஆறுமுகம் கடத்தி சென்று தாலி கட்டியுள்ளார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 55. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** கிழக்கு தாம்பரம் கணபதிபுரம் மேற்கு தெருவைச் சேர்ந்த மண்ணுசாமி மகள் சங்கீதா தாம்பரம் வேளச்சேரி பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்துள்ளார். சங்கீதா உடல் நலக்குறைவு காரணமாக அடிக்கடி பள்ளிச் செல்லாமல் இருந்துள்ளார். இதனால் பள்ளி தலைமை ஆசிரியர் சங்கீதாவை பள்ளி வர வேண்டாம் என்று கூறியதால் மனமுடைந்த சங்கீதா தூக்குமாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | வகுபபறை வன்முறை | பிரபாகர், RMA |
| 56. | 02.05.09 | **சேலம் மாவட்டம்:** தீவட்டிப்பட்டி அருகேயுள்ள பூசாரிப்பட்டியை சேர்ந்த ராமன் மகன் நாஞ்சில்வளவன் மெட்ரிக் பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வருகிறான். இந்நிலையில் மாணவன் உடல்நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் உள்ளதாக பெற்றோருக்கு தகவல் வந்தது. அங்கு சென்று பார்த்த போது சிறுவன் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளான். இதனால் ஆத்திரம் அடைந்த உறவினர் நாங்சில்வளவன் ஆசிரியர் அடித்ததால் தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக புகார். | வகுப்பறை வன்முறை | பிரபாகர், RMA |
| 57. | 02.05.09 | **சேலம் மாவட்டம்:** வாழப்பாடி அருகேயுள்ள குறிச்சி கிராமத்தை சேர்ந்த பொன்னுசாமி மகன் பிரவீன்குமார் பேரையூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 7ம் வகுப்பு படித்து வருகிறான். பள்ளி விட்டு வீடு திரும்பும் போது அப்பகுதியைச் சேர்ந்த யோகேஷ் ஆசிட் ஊத்தியால் உடல் வெந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதி. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | பிரபாகர், RMA |
| 58. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** ஆவடி வெள்ளைசேரி பகுதியைச் சேர்ந்த மகேஷ் மனைவி தனலட்சுமி. மகேஷின் முதல் மனைவி இறந்து விட்டதால் இரண்டாவதாக தனலெட்சுமியை திருமணம் செய்தார். தனலெட்சுமியை மகேஷ் வரதட்சணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேட்டு கொடுமைப்படுத்தியதால் மனமுடைந்த மகேஷ்வரி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 59. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** பெரம்பூர் ரெயில்வே காலணியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மகள் அமிர்தவர்ஷினி (17) தனியார் பள்ளியில் +2 படித்து வந்தவர் ஆசிரியர் திட்டியதால் மனமுடைந்தவர் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | வகுப்பறை வன்முறை | பிரபாகர், RMA |
| 60. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் அருகேயுள்ள பட்டரவாக்கம் பகுதியைச் சேர்ந்த குயின்மேரி (20). அப்பகுதியைச் சேர்ந்த ராஜாபாண்டியை 4 வருடமாக காதலித்துள்ளார். இந்நிலையில் 7 மாத கர்ப்பினியான குயின்மேரி திருமணம் செய்ய வற்புறுத்தியுள்ளார். ராஜபாண்டி தலைமறைவு. இது குறித்து மேரி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 61. | 02.05.09 | **விழுப்புரம் மாவட்டம்:** திண்டிவனம் ரோசனை மாரியம்மன் கோவில் வடக்கு தெருவைச் சேர்ந்த நாராயணன் மனைவி கலைவாணி. இருவருக்கும் அடிக்கடி குடும்பத் தகராறு இருந்து வந்துள்ளது. இதனால் கலைவாணி கோபித்து கொண்டு தாய் வீட்டில் இருந்து வந்துள்ளார். இதனால் கலைவாணியை அழைக்க சென்ற போது மனைவி வீட்டார் அவமரியாதை செய்ததுடன் போலீசில் புகார் செய்துள்ளனர். மேலும் பெண் போலீசார் அவதூராற திட்டியதால் மனமுடைந்த நாராயணன் தற்கொலை முயற்சி. | | பிரபாகர், RMA |
| 62. | 02.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசபாக்கம் அருகே உள்ள வடகருங்காலிப்பாடி கிராமத்தைச் சேர்ந்த காந்தி மனைவி தனலெட்சுமிக்கும் அவரது கணவர் காந்திக்கும் அடிக்கடி குடும்பத் தகராறு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று காந்தி, தனலெட்சுமியை அடித்துள்ளார். இதனால் வாழ்க்கையில் வெறுப்படைந்த தனலட்சுமி தனது 2 குழந்தைகளுக்கு விஷம் குடித்து தானும் குடித்துள்ளார். இதில் இரண்டு குழந்தைகளும் இறந்துவிட்டனர். தனலெட்சுமி தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர், RMA |
| 63. | 02.05.09 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி சர்மாநகர் எருக்கன்சேரி நெடுஞ்சாலையில் உள்ள தனியார் கட்டிடத்தில் 8 மாத பெண் குழந்தை 30 இடங்களில் சூடு போட்ட நிலையில் | பெண் சிசு சித்ரவதை. | பிரபாகர், RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிடந்தது. இது பற்றி போலீசார் விசாரணை. | | |
| 64. | 02.05.09 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் தாலுகா கெடவாடி கண்டிகை கிராமத்தை சேர்ந்த கோபாலகிருஷ்ணன் மகள் பார்வதியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தார் மாட்டு தொழுவத்தில் அடைத்து மாட்டு தீவணமான புண்ணாக்கு மற்றும் தண்ணீர் கொடுத்து அடித்து சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி பார்வதி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி RMA |
| 65. | 02.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி எமனேஸ்வரத்தை சேர்ந்த பாலகிருஷ்ணன் மனைவி குஞ்சரம். அரசு ஊழியரான பாலகிருஷ்ணன் உடல நலக்குறைவில் இறந்து போனார். இந்நிலையில் குஞ்சரம் பென்சன் பணம் கேட்டு விண்ணபித்திருந்தார். பணம் கிடைப்பதில் கால தாமதம் ஆனதால் தனது செலவிற்கு பணம் இல்லாததால் மனமுடைந்தவர் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த RMA |
| 66. | 02.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே சாக்கோட்டை ஆம்பக்குடி பகுதியைச் சேர்ந்த கணேசன் மனைவி உமையம்மாள். கணேசன் குடிப்பழக்கம் உடையவர். இதனால் குடும்பத்தில் தகராறு ஏற்படுவதுண்டு. இதனால் மனமுடைந்த உமையம்மாள் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த RMA |
| 67. | 02.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** பூவந்தி அருகே உள்ள எம்.ஜி.ஆர் நகரை சேர்ந்த முத்து மகள் காளிஸ்வரி (19)யை அப்பகுதியைச் சேர்ந்த அருண் புகழ் கேலி கிண்டல் செய்ததுடன், மானபங்கம் செய்ய முயற்சி. இது குறித்து காளிஸ்வரி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த RMA |
| 68. | 02.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கீழக்கரை அருகே மாயாகுளம் பகுதியில் உள்ள தர்கா அருகில் உள்ள தனியார் இடங்கள் மற்றும் லட்சுமிபுரம் பகுதியில் மணல் திருடப்படுகிறது. மணல் தோண்டிய இடத்தில் கடல் நீர் வரத்து உள்ளதால் கடல் நீர் ஊருக்குள் புகுந்து அபாயம் ஏற்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இதில் தலையிட்டு உடனடியாக சட்ட விரோதமாக அள்ளுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். | மணல் கொள்ளை | ஆனந்த RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 69. | 02.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** சாறுரைச் சேர்ந்த இளநீர் வியபாரி கருப்பையா மனைவி பாண்டிசெல்வி (23). 80 வயதுடைய கருப்பையாவிற்கு 3 மகன்கள், 2 மகள்கள் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் முடிந்த நிலையில் 23 வயதுடைய பாண்டிசெல்வியை இரண்டாவது திருமணம் செய்துள்ளார். இதற்கு கருப்பையாவின் மகள்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் கருப்பையா பாண்டிசெல்வியை பிரித்து வைத்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | ஆனந்த RMA |
| 70. | 02.05.09 | **சிவகங்கை மாவட்டம்:** ஏக்கூர் தனியார் விடுதி மாணவர்கள். தனியார் விடுதி காப்பாளர் லயோலாவின் சட்டையை யாரோ கிழித்து விட்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த லயோலா 6,7,8,9ம் வகுப்பு மாணவர்களின் சட்டையை கிழித்து விட்டார். இது குறித்து பொது மக்கள் போலீசில் புகார். | விடுதி வன்முறை | ஆனந்த RMA |
| 71. | 02.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கீழக்கரை நகராட்சி பகுதியில் மலேரியா ஒழிப்பு மருத்துவமனை இருந்தும் நடவடிக்கை எடுக்காததால் மக்கள் காய்ச்சலால் அவதிப்பட்டு வருகின்றனர். | மருத்துவமனை அலட்சியம். | ஆனந்த RMA |
| 72. | 02.05.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** திருவாடனை தாலுகாவில் ரேஷன் கடைகளில் மளிகை பொருட்கள் வாங்க கட்டாயப்படுத்துவதாக பொது மக்கள் புகார் தெரிவித்துள்ளனர். | ரேஷன் கடை | ஆனந்த RMA |
| 73. | 02.05.09 | **திருப்பூர் மாவட்டம்:** தாராபுரம் பார்க் ரோடு பகுதியில் வசிக்கும் அப்புநாயர் மகன் மணிகண்டன் மனைவி ரேவதி. 5 மாத கர்ப்பினியான ரேவதி கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்ததால் மனமுடைந்த ரேவதி தற்கொலை செய்து கொண்டார். மருத்துவமனையில் உடலை பிரேத பரிசோதனை செய்து தருவதில் தாமதம் ஆனதால் உறவினர்கள் திடீர்சாலை மறியலில் ஈடுபட்டனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 74. | 02.05.09 | **ஈரோடு மாவட்டம்:** ராக்கிபாளையத்தை சேர்ந்தவர் முனியாண்டி.கஞ்சா விற்பனை செய்ததாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த முனியாண்டி சிறையில் மாரடைப்பால் உயிரிழந்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | சிறை கைதி மரணம் | பெருமாள் RMA |
| 75. | 02.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** ஒடசல்பட்டி பகுதி கிருஷ்ணன் மகள் ஜெயப்பிரியா (8) அப்பகுதியில் உள்ள அரசு துவக்கப்பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வருகிறார். அப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயராமன் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது பற்றி | வகுப்பறை வன்முறை | பெருமாள் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போலீ புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 76. | 02.05.09 | **சேலம் மவாட்டம்:** தம்மம்பட்டி டவுன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட 17வது வார்டு பகுதியில் உள்ள தேவேந்திரகுல வீதியில் உள்ள பெண்களை கட்டாயமாக மதம் மாறச் செய்வதாக புகார். | கட்டாய மதமாற்றம் | பெருமாள் RMA |
| 77. | 02.05.09 | **கிருஷ்ணகிரி மவாட்டம்:** போச்சம்பள்ளி புலியூர் அருகே உள்ள மேட்டுக்கடை பகுதியைச் சேர்ந்த சின்னராஜ் மனைவி மலர். சின்னராஜூக்கும் அப்பகுதியைச் சேர்ந்த அழகரிக்கும் வியாபாரம் தொடர்பாக பிரச்சனை இருந்து வந்துள்ளது. இந்நிலையில் சம்பவத்தன்று அழகிரி சின்னராஜூ வீட்டு அருகே ஆபாசமாக பேசியுள்ளார். இதை தட்டி கேட்ட மலர் மற்றும் மாமியார் லட்சுமியை தாக்கியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 78. | 02.05.09 | **தர்மபுரி மவாட்டம்:** மாரண்டஅள்ளி புது தெருவை சேர்ந்த கணேசன் மனைவி முனியம்மாளை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணைக் கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். சம்பவத்தன்று ஏற்பட்ட பிரச்சனையில் அடைந்த கணேசன் முனியம்மாள் மீது மண்ணெணைய் ஊற்றி தீ வைத்தார். இதில் முனியம்மாள் உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 79. | 02.05.09 | **கிருஷ்ணகிரி மவாட்டம்:** ஒசூர் ஏரி தெருவைச் சேர்ந்தவர் சாரதாம்மாள் (82) வீட்டில் தனியாக இருந்த பொழுது அப்பகுதியில் உள்ள அடையாளம் தெரியாத 30 வயது மதிக்கத்தக்க வாலிபர் கத்தியை காட்டி பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 80. | 02.05.09 | **தர்மபுரி மவாட்டம்:** ஆசிரியர் காலனி பகுதியைச் சேர்ந்த குமாரசாமி மகள் விஜயா (17) அப்பகுதியைச் சேர்ந்த வங்கி ஊழியரான முனிவேல் கடத்தி விட்டதாக குமாரசாமி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 81. | 02.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** அரூரை சேர்ந்தவர் ராஜா மகள் ராஜலட்சுமியை அப்பகுதியைச் சேர்ந்த மாதேஸ் காதலித்து பாலியல் பலாத்காரம் செய்து திருமணம் செய்ய மறுப்பு. மேலும் ராஜலட்சுமிக்கு தெரியாமல் மற்றொரு பெண்ணுடன் திருமணம் செய்து கொண்டார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 82. | 02.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** மதிகோண்டபாளையம் உங்காரனஅள்ளியைச் சேர்ந்தவர் செல்வராஜ் | பெண்சிசு கொலை | செந்தில் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனைவி மனிரத்னாவுக்கு 5 நாட்களுக்கு முன் பெண் குழந்தை பிறந்தது. குழந்தையின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தை இறந்துள்ளது. குழந்தை சாவில் மர்மம் உள்ளதாக போலீசார் சந்தேகம். விசாரணை. | | |
| 83. | 02.05.09 | **ஈரோடு மாவட்டம்:** சேந்தமங்கலம் அருகே உள்ள கொண்டப்பநாயக்கன்பட்டியைச் சேர்ந்த செங்கோடன் மகள் +2 முடித்து விட்டு வீட்டில் தனியாக இருந்த போது அப்பகுதியைச் சேர்ந்த செந்தில் கடத்தி கட்டாய திருமணம் செய்து வைத்ததாக புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 84. | 02.05.09 | **சேலம் மாவட்டம்:** கெங்கவல்லி அருகே உள்ள ஆணையம்பட்டியில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட தகராறில் அவர்களின் பெற்றோர்களிடையே கோஷ்டி மோதலாக மாறியது. இதனால் போலீசார் 24 பேரை கைது செய்து 25 பேரை தேடி வருகின்றனர். இந்நிலையில் பாதுகாப்புக்கு போலீசார் குவிக்கப்பட்டனர். போலீசார் விசாரணைக்கு பயந்து அக்கிராம மக்கள் ஊரை விட்டு வெளியேற்றம். | கோஷ்டி மோதல் | செந்தில் RMA |
| 85. | 02.05.09 | **சேலம் மாவட்டம்:** ஆத்தூர் கம்பர் பெருமாள் கோவிலை சேர்ந்த பாலாஜி (எ) செந்தில் (35). ஆத்தூர் பகுதி கிராம மக்கள் 20க்கும் மேற்பட்டோரிடம் அரசு வேலை வாங்கி தருவதாக கூறி, போலியான அரசு உத்தரவு வழங்கி பல லட்சம் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் புகார் கொடுக்க சென்றால் போலீசார்அலட்சியமாக பதில் கூறி திருப்பி அனுப்பி உள்ளனர். | காவல் நிலைய வன்முறை | செந்தில் RMA |
| 86. | 02.05.09 | **நாமக்கல் மாவட்டம்:** வெடியரசம்பாளையம் பழனிச்சாமி மகள் உமாமகஸே்வரி. 10 வயதுடைய மகேஸ்வரி திடீர் என காணவில்லை. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த ராஜா அவரது குடும்பத்தினர் திருமணம் செய்து கடத்தியதாக பழனிச்சாமி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 87. | 02.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** பஞ்சப்பள்ளி அருகே உள்ள பாளையம் பகுதியைச் சேர்ந்த நாகராஜன் இன்டூர் காவல் நிலையத்தில் ஏட்டாக பணி புரிந்தவர். காவல் நிலையத்திற்குள்ளே மதுவில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 88. | 02.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** பென்னாகரம் மூங்கில்மடுவு பகுதியைச் சேர்ந்த பொன்னுசாமி மனைவி மல்லிகா. மல்லிகாவுக்கும் அவரது கணவருக்கும் அடிக்கடி குடும்பத் தகராறு ஏற்படுவதுண்டு. இந்நிலையில் சம்பவத்தன்று | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஏற்பட்டபிரச்சனையில் மல்லிகாவை பொன்னுசாமி கத்தியால் கழுத்தை அறுத்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 89. | 04.05.09 | **நாமக்கல் மாவட்டம்:** ராமாபுரம் புதூரில் ஸ்ரீகோகுல்நாத மிஷன்ஸ் நர்சிங் பயிற்சி நிறுவனம் முறையான அனுமதி இல்லாமல் பயிற்சி நிறுவனம் நடத்தி வந்துள்ளனர். இதனால் வருவாய்துறையினர் தடை விதித்தனர். இந்நிலையில் மாணவர்களின் சான்றிதழ்களை வழங்காமல் இந்நிறுவனத்தை இடித்துள்ளது. இது பற்றி போலீசில் புகார். | கல்லூரி வன்முறை | செந்தில் RMA |
| 90. | 04.05.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** காவேரிபட்டினம் முத்து மகள் லட்சுமியை மர்மநபர்கள் கடத்தி சென்று கற்பழித்து கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 91. | 04.05.09 | **நாமக்கல் மாவட்டம்:** தனியார் பாரா மெடிக்கல் கல்லூரி மாணவி தனலெட்சுமி (18). தனியார் பாரா மெடிக்கல் கல்லூரி நிர்வாகி மாதையன் மற்றும் அவரது மனைவி மாயாயி ஆகியோர் மின் கட்டணம் செலுத்தவில்லை என்பதால் மூங்கில் பிரம்பால் மூன்று மாணவிகளை அடித்து கழிவறையை சுத்தம் செய்யும்படி கூறியுள்ளார். இதுபற்றி தனலெட்சுமி கலெக்டரிடம் புகார். | கல்லூரி வன்முறை | செந்தில் RMA |
| 92. | 04.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** ஏரியூர் அண்ணாநகரைச் சேர்ந்த மாது மகன் ரமேஷ் அப்பகுதியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். உடல்நலக்குறைவால் ரமேஷ் பள்ளிக்கு செல்லவில்லை. 3வது நாள் பள்ளிக்கு சென்ற போது ஆசிரியர் அப்பாதுரை ஏன் பள்ளிக்கு வரவில்லை என கூறி அடித்துள்ளார். இதில் ரமேஷ் மயக்கம் அடைந்தார். இது பற்றி மாது போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | செந்தில் RMA |
| 93. | 04.05.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** காவேரிப்பட்டினம் குழந்தை தொழிலாளர்கள். காவேரிப்பட்டினம் பல்வேறு பகுதியில் நடந்த சோதனையில் பல்வேறு இடங்களில் இருந்து நான்கு குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டனர். | குழந்தை தொழிலாளர்கள் மீட்பு. | செந்தில் RMA |
| 94. | 04.05.09 | **தர்மபுரி மாவட்டம்:** அரூர் பெரியமாண்டி தெருவை சேர்ந்த சம்பத் அரூர் பேரூராட்சிக்கு சொந்தமான கடையில் உரிமைம் எடுத்து கடை நடத்தி வந்துள்ளார். இந்நிலையில் ஆண்டுதோறும் கடை உரிமையை புதுப்பிக்க பேரூராட்சி செயல் அலுவலரிடம் விண்ணப்பம் மற்றும் தொகையும் கட்டி விட்டனர். ஆனால் கடை உரிமையை புதுப்பிக்க பேரூராட்சி செயல் அலுவலர் ரூ. 3 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக | லஞ்ச ஊழல் | செந்தில் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போலீசில் புகார். | | |
| 95. | **04.05.09** | **தர்மபுரி மாவட்டம்:** பாலக்கோடு அருகே உள்ள சிக்கதார்தனஅள்ளி கிராமத்தை சேர்ந்த சூடாமணி என்கிற கவுதமி குமார் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். பெற்றோர் எதிர்ப்பால் இருவருமே தனியாக குடும்பம் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் குமார் பெற்றோர் அவருக்கு 2வது திருமணம் செய்து வைக்க முடிவு. இது பற்றி கவுதமி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 96. | **04.05.09** | **தர்மபுரி மாவட்டம்:** காரிமங்கலத்தை அடுத்த பெரியாம்பட்டி பக்கம் உள்ள முருக்கன்காட்டு கொட்டாய் சேர்ந்த ராஜா மனைவி கலா. லாரி டிரைவர் ராஜாவின் மனைவியான கலா வீட்டில் இருந்த பணத்தில் ஆயிரம் ரூபாய் குறைந்துள்ளது. இதை மாமனார், ராஜா தம்பி கேட்டுள்ளனர். இதனால் இவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் மனமுடைந்த கலா விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 97. | **04.05.09** | **தர்மபுரி மாவட்டம்:** நஞ்சேகவுண்டர் தெருவைச் சேர்ந்த சக்தி மகள் புவனேஸ்வரிக்கும் தடங்கம் கிராமத்தை சேர்ந்த கந்தனுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் மணமகள் வீட்டார் வரதட்சணை அதிகம் கேட்டுள்ளார். மேலும் வரதட்சணை கொடுத்தால் மட்டுமே திருமணம் நடைபெறும் என்று கூறியதால் பெண் வீட்டார் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | செந்தில் RMA |
| 98. | **04.05.09** | **அரியலூர் மாவட்டம்:** தருமானூர் அடுத்த நின்னியூர் கிராமத்தை சேர்ந்த மணி (35) மனைவி லெட்சுமி (29). தனது தங்கைக்கு 5 பவுன் நகை கொடுத்துள்ளார். இந்நகையை திரும்பி வாங்குமாறு மணி கேட்டுள்ளார். ஆனால் லட்சுமி இதற்கு மறுப்பு தெரிவித்ததால் இருவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. இதில் ஆத்திரம் அடைந்த மணி, லெட்சுமியை கத்தியால் குத்து கொலை செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |
| 99. | **04.05.09** | **நாகப்பட்டினம் மாவட்டம்:** வேளாங்கன்னி அடுத்த தென்காசி மாரியம்மன் கேரிவல் தெருவைச் சேர்ந்த ரஞ்சிதத்திற்கும், அப்பகுதியைச் சேர்ந்த உதயகுமாருக்கு தாய் உறவினர் வீட்டு காதனி விழாவில் மொய் பணம் வைப்பதில் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரம் அடைந்த உதயகுமார் ரஞ்சிதத்த கட்டையால் தாக்கி அரிவாளால் வெட்டியுள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 100. | 04.05.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** கும்பகோணம் பொதிகைநகர் கே. எம்.பி.எட் நகரைச் சேர்ந்த சித்தானந்தம் மனைவி சுமதி பேட்டைத் தெரு விஜயா உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக பணியாற்றி வந்தார். இந்நிலையில் அப்பள்ளி தலைமை ஆசிரியர் சேகர், சுமதியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |
| 101. | 04.05.09 | **திருச்சி மாவட்டம்:** துறையூர் அடுத்த கோட்டப்பாளையம் வளையப்பட்டியை சேர்ந்த பழனியாண்டி மகள் பகவதி, நாராயணயனை காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில் நாராயணன் தாய் மற்றும் சகோதரி வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |
| 102. | 04.05.09 | **ஈரோடு மாவட்டம்:** கரூர் செல்லும் மெயின் ரோட்டில் ஆர்.டி.ஓ அலுவலகம் அருகில் உள்ள பாரத்நகரில் பெண் ஒருவர் தனது கை குழந்தையுடன் அப்பகுதியில் உள்ள ரயில்வே தண்டவாளத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்று போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 103. | 04.05.09 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை அருகில் உள்ள ஈங்கூர் விநாயகர் தெருவைச் சேர்ந்த சுப்ரமணியன் மகள் மணிமேகலைக்கும் பிரபு என்பவருக்கும் திருமணம் நடந்துள்ளது. இந்நிலையில் பிரபுவின் போக்கு பிடிக்காமல் மணிமேகலை தந்தை வீட்டில் வசித்து வந்தார். இந்நிலையில் மணிமேகலை கல்லூரி சென்று திரும்பும் போது அங்கு வந்த பிரபு மணிமேகலையை டாட்டா சுமோவில் கடத்தி சென்றுள்ளார். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 104. | 04.05.09 | **கோவை மாவட்டம்:** உக்கடம் போலீஸ் நிலையத்தில் ஏட்டாக பணிபுரியும் குமாரசாமி பணி முடிந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது வழியில் 2 ஊழியர்கள் போதையில் குமாரசாமியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தில் தரகாறு செய்து அடித்து உதைத்துள்ளனர். இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 105. | 04.05.09 | **ஈரோடு மாவட்டம்:** தாலுகா அலுவலகத்தில் அமைந்துள்ள கிளை சிறையில் விசாரணை கைதிகளை பார்க்க வரும் உறவினர்களிடம் கெடுபிடியாக பணம் வசூல் செய்வதுடன் தரமான உணவு வழங்காமல் மட்டமான உணவுகளை வழங்குவதாக புகார். | சிறை வன்முறை | பெருமாள் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 106. | 04.05.09 | **கோவை மாவட்டம்:** அன்னூர் அருகே உள்ள குன்னத்தூர் பகுதியைச் சேர்ந்த செந்தில்குமார் மனைவி மாலதி. செந்தில்குமார் கடை வீதிக்கு சென்ற போது அப்பகுதியில் உள்ள மொபட் காணாமல் போக அது செந்தில்குமார் திருடியதாக அப்பகுதியினர் போலீசில் பிடித்து கொடுத்துள்ளனர். இச்செய்தியை கேள்விபட்ட மாலதி அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 107. | 04.05.09 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** மயிலாடுதுறை தனியூர் சாலியா தெருவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (63) மனைவி யோகா (39) மீது சந்தேகப்பட்டு அடிக்கடி தகராறு செய்ததினால். யோகா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |
| 108. | 04.05.09 | **திருவாரூர் மாவட்டம்:** மன்னார்குடி அருகே பரவாக்கோட்டையைச் சேர்ந்த தர்மராஜ் மனைவி லீலா (24) இருவருக்கும் திருமணமாகி 4 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாததால் இருவருக்குமிடையே அடிக்கடி தகராறு வந்துள்ளது. இந்நிலையில் தர்மராஜ் லீலாவை கத்தியால் குத்தியுள்ளார். படுகாயமடைந்த லீலா மருத்துவமனையில் அனுமதி. இது பற்றி லீலா போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |
| 109. | 04.05.09 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** நீடாமங்கலம் அருகே கூத்தாநல்லூர் அடுத்த அம்பேத்கார் நகரைச் சேர்ந்த ரோஷினி 5 வயதுடைய ரோஷினியை அப்பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய மகாராஜா பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது பற்றி காவல் நிலையத்தில் புகார். | சிறுமி பாலியல் பலாத்காரம் | திருமுகம் RMA |
| 110. | 04.05.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** கும்பகோணம் குடந்தை அருகே உள்ள காலர்கூத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மனைவி வள்ளியின் நடத்தையில் சந்தேகப்பட்டு சின்னத்தம்பி தகராறு செய்துள்ளார். இதனால் வள்ளியை வெட்டி கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |
| 111. | 04.05.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** பட்டுக்கோட்டை அருகேயுள்ள கரிக்காடு கிராமத்தைச் சேர்ந்த மாதவி (27). டாக்டர் மாதவியிடம் வரதட்சணை கேட்டு அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் கொடுமைப்படுத்தியுள்ளனர். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | திருமுகம் RMA |
| 112. | 04.05.09 | **கோவை மாவட்டம்:** வால்வாறை நல்லமுடி எஸ்டேட்டைச் சேர்ந்த சின்னப்பன் மகன் | | பெருமாள் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விமல்ராஜ் காதலி சுகன்யா. விமல்ராஜ் கோவையில் தங்கி தனியார் கல்லூரியில் படித்து வந்தார். அப்பகுதியைச் சேர்ந்த சுகன்யாவை காதலித்து உள்ளார். இந்நிலையில் சுகன்யா கர்ப்பமுற்று குழந்தை பிறந்துள்ளது. இதை அறிந்த பெற்றோர் விமல்ராஜ்–ஐ திட்டியுள்ளனர். இதில் மனமுடைந்த விமல்ராஜ் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். | | |
| 113. | 04.05.09 | **கோவை மாவட்டம்:** கோவில்பாளையம் பகுதியைச் சேர்ந்த தாமஸ் மகள் அனுஜா வேலைக்கு சென்று வரும் போது பஸ்சில் கார்த்திகேயனுடன் தொடர்பு ஏற்பட்டுள்ளது. பின் இருவருமே காதலித்துள்ளனர். இந்நிலையில் கார்த்திகேயன் ஏற்கனவே திருமணமானவர் என்பதை அறிந்து அனுஜா கார்த்திகேயனை புறக்கணித்துள்ளார். இதனால் கோபம் அடைந்த கார்த்திகேயன் செல்போனில் ஆபாச படம் காட்டி தொந்தரவு செய்துள்ளார். இது பற்றி அனுஜா போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 114. | 04.05.09 | **கோவை மாவட்டம்:** சூலூர் பக்கம் உள்ள அப்பநாயக்கன் புதூரைச் சேர்ந்த அம்சவள்ளி (39). அம்சவேணியின் கணவர் இறந்ததால் தனது குழந்தைகளுடன் வறுமையில் வாடி வந்தார். இதனால் மனமுடைந்தவர் தனது 4 குழந்தைகளுடன் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார். இந்நிலையில் முதலில் 2 குழந்தைகளை கிணற்றி தள்ளிவிட்டார். பின் மற்ற 2 குழந்தைகளை தள்ள முயற்சிக்கும் போது அப்பகுதியினர் காப்பாற்றினர். இது பற்றி போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 115. | 04.05.09 | **கோவை மாவட்டம்:** உடுமலை, பொள்ளாச்சி ரோட்டில் உள்ள தீயணைப்பு நிலையத்துக்கு பின்புறம் எரிந்த நிலையில் பெண் சடலம் மீட்கப்பட்டது. இந்த பெண் யார் என்று போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 116. | 04.05.09 | **திருச்சி மாவட்டம்:** மண்ணச்சநல்லூர் தாலுகா ராசம்பாளையத்தைச் சேர்ந்த பெருமாள் மகள் தவமணி (15). தவமணி அரசு உயர்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வந்தார். அரையாண்டு தேர்வில் மதிப்பெண்கள் குறைவாக எடுத்ததால் முழு ஆண்டு தேர்வுக்கு பள்ளி நிர்வாகம் அனுமதிக்க மறுப்பு. இதனால் மனமுடைந்த தவமணி தற்கொலைக்கு முயற்சி செய்த போது பள்ளி நிர்வாகம் அனுமதிக்கவில்லை. | வகுப்பறை வன்முறை. | பெருமாள் RMA |
| 117. | 04.05.09 | **ஈரோடு மாவட்டம்:** கோபிசெட்டிபாளையம் ஒணாக்குட்டை பகுதியைச் சேர்ந்த பழனிச்சாமி மனைவி செண்பம்மாள். அப்பகுதியில் மாடு | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேய்த்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ராஜன் செண்பம்மாளிடம் தகராறு செய்துள்ளார். இந்நிலையில் ஆத்திரமடைந்த ராஜன் செண்பம்மாளின் கன்னத்தில் கடித்துள்ளார். இது பற்றி போலீசில் புகார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 118. | 04.05.09 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை காட்டுபாட்டியைச் சேர்ந்த பழனிச்சாமி மகள் ரோகினி. மணப்பாறையில் உள்ள புனித மரியன்னை தொடக்கப்பள்ளியில் யு.கே.ஜி படித்து வந்தவர். மர்மமான முறையில் பள்ளி வளாகத்தில் இறந்து கிடந்தார். இது பற்றி போலீசார் விசாரணை. | வகுப்பறை வன்முறை | பெருமாள் RMA |
| 119. | 04.05.09 | **சென்னை மாவட்டம்:** பழைய வண்ணாரப்–பேட்டையைச் சேர்ந்த கார்த்திக்குமார் பள்ளியின் சதவீதம் குறைந்து வரும் என்பதற்காக பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர் கார்த்திங்குமாரை தேர்வு எழுதுவதற்கான ஹால் டிக்கெட் தர பள்ளி நிர்வாகம் மறுத்தது. ஹால் டிக்கெட் தரகோரி தந்தை உயர்நீதிமன்றத்தில் வழக்கு. | வகுப்பறை வன்முறை | பெருமாள் RMA |
| 120. | 04.05.09 | **ஈரோடு மாவட்டம்:** வெள்ளக்கோவில் எல்.கே.பி. வீதியைச் சேர்ந்த செந்தில் மனைவி சிவகாமி. கர்ப்பமுற்ற சிவகாமி, ஈரோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவருக்கு ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. இதில் சிவகாமி மற்றும் பெண் குழந்தையும் இறந்துள்ளனர். இதில் சிவகாமியின் பிரேதத்தை மட்டும் எடுத்து சென்று பெண் சிசுவின் சடலத்தை அங்கேயே விட்டுச் சென்றனர். | பெண் சிசு | பெருமாள் RMA |
| 121. | 04.05.09 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் தக்கோலம் அடுத்த இலுப்பை தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த லதா. லதா காஞ்சிபுரம் தனியார் கல்லூரியில் படித்து வந்தார். இந்நிலையில் சிறப்பு வகுப்பு என்று சென்றவர் வீடு திரும்பவில்லை. இது பற்றி பெற்றோர் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள் RMA |
| 122. | 04.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** வந்தவாசி அடுத்த திருத்தங்கல் கிராமத்தை சேர்ந்த முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் ராஜேந்திரனுக்கு சொந்தமான விவசாய கிணற்றில் பிறந்து இரண்டு நாட்களே ஆன பெண் குழந்தை மீட்கப்பட்டது. போலீசார் விசாரணை. | பெண் சிசு | பாஸ்கர் RMA |
| 123. | 04.05.09 | **வேலூர் மாவட்டம்:** காட்பாடி அடுத்த மெட்டுக்குளம் சேர்க்காடு ஆர்.டிஓ. சோதனைச் சாவடியில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நள்ளிரவில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். கணக்கில் | லஞ்ச ஊழல் | பாஸ்கர் RMA |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | வராத ரூ. 27 ஆயிரம் ரொக்கப்பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இது பற்றி விசாரணை. | | |
| 124. | 04.05.09 | **வேலூர் மாவட்டம்:** கலசப்பாக்கம் அடுத்த நார்தாம்பூண்டி கிராமத்தை சேர்ந்த சாவித்திரி கணவரால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை விண்ணப்பித்துள்ளார். ரூ. 1000 தர வேண்டும் என கிராம நிர்வாக அதிகாரி சம்பத் கூறினார். இது பற்றி போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | பாஸ்கர் RMA |
| 125. | 05.05.09 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு அடுத்த கே.வேரூரில் அரசினர் மேல்நிலைப்பள்ளி மாணவி. +1 படிக்கும் மாணவியை அப்பள்ளி தமிழாசிரியர் திருமணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தியுள்ளார். இது பற்றி பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நடவடிக்கை எடுக்க கூறி தீர்மானம். | வகுப்பறை வன்முறை | பாஸ்கர் RMA |
| 126. | 05.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** மருத்துவம்பாடி மாதாகோயிலைத் தெருவைச் சேர்ந்த கவிதா. 10ம் வகுப்பு படித்து வரும் கவிதா மாதாகோயில் முன்பு நின்று கொண்டிருந்த போது அப்பகுதியில் உள்ள ராஜேஷ் கவிதாவை காதலிப்பதாகவும் திருமணம் செய்யும்படி வலியுறுத்தி தாலி கட்ட முயற்சி. மேலும் இது பற்றி வெளியே சொன்னால் கொலை செய்து விடுவதாகவும் முயற்சி. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர் RMA |
| 127. | 05.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அடுத்த செல்வம்பேட்டையைச் சேர்ந்த லதா (42) மனைவி பவுலினா (37). லாரசன்ஸ் அண்ணன் மாசிலாமணி, தம்பிராஜா சொந்தமான சொத்துகள் பாகப்பிரிவினை செய்யாமல் இருந்தது. இது தொடர்பாக லாரன்ஸ் கோர்டில் மனு தாக்கல் செய்துள்ளார். இதனால் பவுலினாவுக்கும் மாசிலாமணிக்கும் முன் விரோதம் இருந்துள்ளது. இந்நிலையில் சம்பத்தன்று ராஜா மற்றும் பவுலினாவிடம் ஆபாசமாக திட்டி தகராறு செயதுள்ளனர். இது குறித்து போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர் RMA |
| 128. | 05.05.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி அடுத் அக்கூரை சேர்ந்த வேலு மனைவி முத்தம்மாள். வேலு அப்பகுதியைச் சேர்ந்த விநாயகம் என்வரிடம் பணம் வாங்கியிருந்தார். இந்நிலையில் பாதி பணம் கட்டியுள்ளார். பாதி பணத்தை வசூலிக்க சென்ற விநாயகம் மற்றும் தட்சிணாமூர்த்தி வேலு வீட்டுக்கு சென்று மனைவி முத்தம்மாளிடம் தகராறு செய்து ஆபாசமாக திட்டியுள்ளார். இது பற்றி போலீசில் முத்தம்மாள் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 129. | 05.05.09 | **வேலூர் மாவட்டம்:** ஆம்பூர் அருகே உள்ள மாதனூர் அடுத்த பாலூரைச் சேர்ந்த கதிர்வேல். கதிர்வேலுவிடம் அப்பகுதியைச் சேர்ந்த சந்தோஷ்குமார் ரூ. 4 ஆயிரம் கடன் வாங்கியுள்ளார். இந்நிலையில் பலமுறை கதிர்வேல் பணம் திருப்பி கேட்டும் சந்தோஷ்குமார் தரவில்லை. கதிர்வேல் அவரது மனைவி கண்ணகியுடன் சென்று பணம் கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சந்தோஷ்குமார் ஆபாசமான வார்த்தைகளால் திட்டியுள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர் RMA |
